Operation Sovereign Borders

# ஊடக வெளியீடு

**13 நவம்பர் 2016**

## ஆஸ்திரேலியாவினுடைய எல்லைகள் முன்னெப்போதையும் விட வலிமையான நிலையில் உள்ளன

ஆஸ்திரேலியாவிற்கு ஆட்கடத்தல் படகுகளின் வருகையை நிறுத்திய எல்லைகள் இறையாண்மை நடவடிக்கையின் (Operation Sovereign Borders) வெற்றியானது எங்கள் எல்லைகள் முன்னெப்போதையும் விட இப்போது வலுவானது என்பதைக் காட்டுகிறது.

எங்கள் கடல் சார் சொத்துக்களையும் கண்காணிப்பு திறன்களையும் அண்மைக்காலத்தில் மேலும் வலுப்பெறச் செய்தது எதிர்காலத்தில் ஆஸ்திரேலியா வர முயற்சிக்கும் எந்தப் படகுகளும் தடுத்துத் திருப்பி அனுப்பப்படும் என்பதை உறுதிப்படுத்தும்..

OSB ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 29 ஆட்கடத்தல் படகுகள் தடுத்து நிறத்தப்பட்டு 740 க்கும் மேற்பட்ட மக்கள் அவர்கள் புறப்பட்டு வந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

நடைமுறையில் உள்ள அமெரிக்காவின் அகதிகள் அனுமதிகள் திட்டத்திற்குப் (United States Refugee Admissions Program) பரிந்துரைப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையரினால் United Nations High Commissioner for Refugees (UNHCR) உறுதிப்படுத்தப்பட்ட நவ்ரூ மற்றும் பப்புவா நியூ கினி ஆகிய நாடுகளில் உள்ள அகதிகளை மீள்குடியேற்றம் செய்வதை அமெரிக்கா பரிசீலனை செய்ய ஒப்புக் கொண்டுள்ளது என்று இன்று ஆஸ்திரேலிய அரசு அறிவித்தது.

ஆரம்பத்தில் பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, மிகவும் பாதுகாப்பற்ற அகதிகளின் மீள்குடியேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஏற்கனவே பப்புவா நியூ கினி மற்றும் கம்போடியா நாடுகளுடன் நடைமுறையில் இருக்கும் குடியேற்ற ஏற்பாடுகளுடன் இது கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இது,ஒரே ஒரு முறை செய்யப்படுகிற ஏற்பாடும் எதிர்காலத்தில் மீண்டுமொருமுறை நடக்கமுடியாத ஏற்பாடாகும் என்பதுடன் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்ய முயற்சிக்கிற எவருக்கும் கிடைக்காது.

ஆஸ்திரேலியாவின் எல்லைப் பாதுகாப்புக் கொள்கை மாறவில்லை. நாம் படகுகள் புறப்பட்டு வந்த நாட்டிற்கு அவற்றைத் திருப்பி அனுப்பும் பணியைத் தொடர்ந்து செய்வோம். அத்துடன்,

நாம் எதிர்பார்க்கத்தக்க காலத்திற்குப் பிராந்திய செயல்முறையைத் தொடர்ந்து மேற்கொள்வோம்.

ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் சட்டவிரோதமாகப் பயணம் செய்ய முயற்சி செய்யும் எவருக்கும் இங்கே குடியேறுவது ஒருபோதும்  அவர்களது விருப்பத்தேர்வாக இருக்க முடியாது..

ஆஸ்திரேலியாவுக்கு எதிர்காலத்தில் வர முயற்சிக்கும் ஆட்கடத்தல் படகுகள் தோல்வியடையும் என்பதை உறுதி செய்ய,  நமது எல்லைகளை வலுப்படுத்தியுள்ளோம். அரசு இப்போது இந்த ஏற்பாட்டைச் செயல்படுத்த உறுதியாய் உள்ளது

The Australian Border Force, Australian Defence Force ன், ஆதரவுடன், ஆஸ்திரேலிய வரலாற்றில் மிகப் பெரிய மற்றும் மிகவும் திறனுடைய கடல் சார்ந்த கண்காணிப்பையும் மற்றும் எதிர்புத்திறன் கொண்ட   கப்பற்படையையும்  செயல்படுத்துகின்றது.

**ஊடகத் தொடர்பு**: Immigration and Border Protection (02) 6264 2244